உ

கடவுன் துணை.

டம்பாச்சாரியின்மீது

மதனசுந்தரிபாடுகின்ற சிறப்புச்சிந்தும்,

பதமும், அடங்கியிருக்கின்றன.

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

உ

கடவுள் துணை.

டம்பாச்சாரியின்மீது மதனசுந்தரிபாடுகின்ற சிறப்புச்சிந்து.

காப்பு.

அரியயன்முதலோ ரனுதினம்போற்றுங்
கரிமுகன் கழலிணைக்காப்பு.

தங்கப்பண்.

ஏரார்தனபாலன் எழில்தவத்தால்வந்து
சீராகமகாராஜனே-வாசனே
திவ்யகுணபோசனே க

குடிகெடுத்தி கூழாங்பணரோடு
வடிவாய்நேசஞ்செய்வோனே-கோனே
மகிழ்குணமுடையோனே உ

கட்டிக்கொழிக்கின்ற கும்பகோணவையர்தம்மால்
கட்டுறவான சிலாக்கியனே-யோக்கியனே
குவலயத்தினில்மிகுபாக்கியனே ௩

அலங்காரவீடெனக்கு அருமையாய்க்கட்டிதந்த
நலங்கொள்கனயோகனே-வாகனே
நாவலர்புகழ்த்தியாகனே சு

தட்டுமுட்டுசாமான்கள் தங்கத்தாலும்வெள்ளியாலு
திட்டமாயமைத்ததீரனே-சீரனே [ம்
திக்குப்புகழ்மாரனே ரு

பதம்-இராகம்-சாமா-ஏகதாளம்.

மாதரசேயுந்தன்மைபலால்சிக்கிவேபவாடுகின்றேனே
உனைத்தானேநினைத்தேனே
வாராயோமுத்தந்தாராயோயெனைச்சேராயோ

எந்தவேளையும்உந்தன்மைபலால் ஏங்கிநின்றேனே
சகியேனே தகிதானே [டி
தேடியின்னம்வாதாடி செய்யாதடியாதடியாத

என்னுட்டிற்சிறந்தகண்ணாட்டி நீயென்றெண்ணி
வந்தேனேமகிழ்ந்தேபணிந்தேனே [ம்
என்மனம்நொந்து உன்மனம்கன்மனம்கன்மன

கிஞ்சுகமொழியேபஞ்சபாணனென் நெஞ்சைதுளைத்
தானே இளைத்தானே களைத்தானே
கேளடிஅணைந்தாளடி தாளடிதாளடிதாளடி

மேட்டிமையானகண்ணாட்டியே உன்னிடமேனியைத்
தவிக்கிமுத்துகுலிங்கிநொடிபலிக்கி
மெல்லியேமோகவல்லியேயினைசவல்லையோ கூ

கொஞ்சுங்கிளிமொகரஞ்சிதமோ அபரஞ்சியேவாடி
யென்னைநாடிபதம்பாடி
கூட்டிகண்பாராட்டிவிளையாட்டியாட்டிபாட்டி
மாணிக்கமேபெண்ணே ஆணிப்பொன்னேகண்ணே
மாங்குயிலேவாராய் முகம்பாராய்களைதீராய்
மங்கையேதெய்வநங்கையே நீசெய்சங்கையேசங்
நாராயணசாமிநம்பித்தொழுங்கிஷ்ணன்நாதலீலைகளை
உபயங்கவினோதங்களை
நம்படிஅதுதெம்படிநீசெய்வம்படிவம்படிவம்படி

கொச்சகம்.

உன்னைநான்காணாவிடில் ஒருநாமமொருயுகமே
என்னைநீகாணாவிடில் எப்படியோவென்மனது
மன்னமரகதமே மாங்கனியேதேங்கனியே
தன்னையிலாதவனை தழுவியணைந்திடுவாய்.

இராகம்-சரபா-ஏகதாளம்.

மாரனைசினேனடம்பாசாரியெனுந்திரா
உபகாரா-வொய்யாரா
வாடுதேமனம்நாடுதே மயல்நீடுதேநீடுதேநீடுதே
தீரனுந்தனபாலன் மாதவத்துதித்தவனேவாவா
மகானுபாவா-எமைக்காவா
தியாகனேவைபோகனே சயோகனே யோகனே

சொன்னசொல்தவறுதபூபனே துணைவனேவராய்
முத்தந்தாராய்-எனைச்சேராய்
துங்கனே அங்கனேவாரும்இங்கனே இங்கனே

தென்றல்கொடியபுலியைப்போலசீறுதேசாமி
யிந்தப்பூமிதனில்சாமி [னே
தென்னனே எழில்பொன்னனே உயர்கன்ன

இந்திரபோகத்தையுடையசீலனேன் மெய்த்துணையாளா
மணிதோளாசுகுணாளா
ஏதடாஎன்மேல்வாதடாகாதடா

உன்னைவிட்டுநானின்னொருவனை
உண்ணமாட்டேனேசகியேனேஎங்கள்கோனே
ஓரடாமையல்தீரடா கண்பாரடா

தங்கப்பன்.

எனதுநற்றங்கையா இவர்சொல்பாட்டினுக்கு
கனஞ்சொரிந்தமணியே அணியே
கணிகையர்க்கோர்பணியே

திருவாணமாகஇன்று நீயெண்ணையிடென்று
கிருபையாய்க்கேட்டதூயனே-சகாயனே
கிள்ர்பவனவாயனே

புரயிலைமெட்டுக்கப்பால் புகலுஞ்சினேகருடன்
தகையாய்க்காற்றுடி ரேக்லாலேலாலோலா
தரும்பந்தயம் விட்டசிலா

களவிலென்வீட்டில்போன கனமாம்பொருள்களை
உளமகிழ்வாய்த்தந்த காமனேபூமனே
ஒப்பிலாமுகசோமனே

புல்லைபசெட்டியிடம்பொருள்கடன்வாங்கித்தந்த
சல்வியுடையசுந்தரா யந்தரா
கல்வியில்சுகவிந்திரா

ஷேக்மீராலப்பையிடம் திகழ்நவரத்தினங்கள்
கோக்கவிட்டபுண்ணியனே கண்ணியனே
கோதிலாதகண்ணியனே

தட்டானையழைப்பித்து சாற்றும்நகைகளெல்லாம்
ஒட்டாகச்செய்தசீலனேலோலனே
ஒட்டாகச்செய்தசீலனே

இராகம்—கலியாணி—அடதாளம்.

பல்லவி.

கூச்சமில்லாமல்பேசுவார்களேயல்லாது
கொடுக்கநிர்வாகமிராது

அநுபல்லவி.

ஆச்சுதுபாங்கிலும் ஆர்பத்தென்டவுசியிலும்
அக்ராபாங்கிலும் அனேகஅவுசிலும்
எச்சென்றெண்ணாமல் இன்னம்வேணதுண்டு
எனதுவேப்பிலே அடித்துப்போவார்பண்டு கூச்

மதுரைக்கடையில் குடிக்கூலிக்குதலைகுட்டை
வாங்கிச்சம்பமாக முன்னேபட்டைபட்டை
பதமாய்த்திருத்திக்கட்டி யாரையும்சட்டை
பண்ணித்திரிவரல்லால் பார்த்தாலுள்ளேலொட்டை

ரவைகத்திரிப்பாவல் ரவைமயிர்மாட்டி
நான்வாங்கித்தருகிறேனென்று வாயால்நீட்டி
சுவையைக்காட்டி யெழில்பலசனையின்மேலே
தூங்கிமறுநாள்தலைகாட்டமாட்டார்கள்சாலே கூச்

உந்தனுக்கிணையிவ்வுலகினிலாருண்டு
உந்தன்சொல்லுக்குநான்சொல்லுவேனோரண்டு
மன்மதனேசிங்காரமேதியாகனே
மருவிவிளையாடும்வாகனேயோகனே.

தங்கப்பன்.

என்னைக்கைகோர்த்துஎழில்திருவொற்றியூர்க்கு
உன்னதமாய்சென்றசெய்யனே-துய்யனே
ஒளியாரமலர்க்கைடினே

சத்திரத்தையரைசாமர்த்தியத்திலே
எத்தியேபுண்டபுண்ணியனே திண்ணியே
யெங்கும்புகழ்கண்ணியனே

திண்டுதிமாசுபோட்டு திண்ணைமீதுட்கார்ந்து
கொண்டியிருக்கும்போது கோஷ்டமாய்பண்டாரங்கள்
ஞானபாட்டைப்பாட நான்சென்ஸ்என்றுரைத்து
தான்சவுக்கையெடுத்து சாற்றியவர்களைப்பின்
தையர்மீதுபாடுங்களென்று சீர்மையாய்க்கேட்ட
நாதனே தேசம்புகழ் விநோதனே.

டம்பாச்சாரிசிந்து

முற்றிற்று.